4th February 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்து மிக முக்கியமானது. ஓரளவு இளம் குற்றவாளிகள் சம்பந்தப்பட்டவரை மனோதத்துவ நிபுணர்களின் உதவியைக் கொண்டு அவர்களைத் திருத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பெரியவர்கள் விஷயத்திலும் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கோ. சி. மணி : சிறைச்சாலையில் வைத்திருக்கின்ற சிறைப்பள்ளிகளில் அதிகமான கைதிகள் வந்தால் அவர்கள் செல்கிற வரையில் பள்ளி நடக்கிறது இல்லை. இது கவனிக்கப்படுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எவ்வாறு இந்தப் பள்ளிகள் நடைபெறுகின்றன என்பதை நான் பார்த்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் சமீபத்தில் நடைபெற்ற விஷயத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி விவரங்களை எனக்கு எழுதி அனுப்பினால் மேலும் பரிசிலனை செய்யலாம்.

B.D.S. Course

* 59 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Madras Dental Council that the selection of candidates for the B.D.S. Course should be conducted by a separate committee with the members of the dental profession; and

(*b*) if so, the action taken thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(*a*) Yes.

(*b*) As the existing system of selecting candidates for admission to the B.D.S. Course is working satisfactorily, it is considered not necessary to have a separate committee for the selection of candidates for admission to the course or to include a member from the Dental profession on the committee. The President of the Madras Dental Council has been informed accordingly.

திரு. வை. சங்கரன் : "டென்டல் கோர்ஸ்க்கு" பிரத்தியேக தகுதிகள் இருக்க வேண்டுமென்ற காரணத்தினால் அது சம்பந்தமான தகுதி உள்ளவர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முறையீடு வந்திருக்கிறதா ? பொதுத் தகுதியை மட்டும் வைத்துப் பார்ப்பதால் டென்டல் கோர்ஸ் சம்பந்தமான கான்டிடேட்கள் சரியாக தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற குறை இருக்கிறதா ? அதைப் போக்குவதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : 'மெயின் க்வஸ்டினுக்கே' அந்த விடையை அளித்தாகிவிட்டது. தற்போதுள்ள குழுவினரும் அந்தப் பரிட்சை பாஸ் செய்தவர்கள்தான். அதுபற்றி பிரசிடென்டுக்கும் 'இன்பர்மேஷன்' அனுப்பியாகி விட்டது.